*2016 ஜூலை 25]*

# 2. தகவல் கோரல்

## பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு தடுப்பணை கட்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநில அரசு பாலாற்றில் தடுப்பணை கட்டுவது குறித்து, நான் தங்களிடத்தில் ஓர் ஒத்திவைப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இந்தப் பிரச்சினைக் குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் இங்கே மேற்கொண்டு எதையும் பேசவேண்டாம். (குறுக்கீடுகள்) அவருடன் நான் பேசிக் கொண்டிருக்கும்போது, எல்லோரும் எழுந்து நின்றால் எப்படி? (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சித் தலைவரிடம் நான் பேசிக்கொண்டிருக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சித் தலைவரிடம்தான் நான் பேசிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்; நீங்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவரிடம் நான் பேசிக்கொண்டிருக்கும்போது, நீங்கள் எல்லோரும் எழுந்து நின்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) எல்லோரும் நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்வதைப்போன்றுதான் சபையை நடத்த வேண்டுமென்றால், அது என்னால் முடியாது. விதிமுறைகள் இருக்கின்றன. (குறுக்கீடுகள்)*

*முற்பகல் 10-05*

*நீதிமன்றத்திலே அதுகுறித்த வழக்கு இருக்கின்றது, அதற்குக் குந்தகம் விளைவிக்கின்ற வகையில், மேற்கொண்டு இங்கே எதையும் பேச வேண்டாம். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் இருக்கைக்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவரும், நானும் பேசிக் கொண்டிருக்கிறோம் அல்லவா? (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவரைப் பேசுவதற்கு அனுமதித்திருக்கிறேன் அல்லவா?*

பிறகு நீங்கள் எல்லோரும் எழுந்து நின்று கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேச அனுமதி கேட்டார்: நான் அவருக்கு அனுமதி கொடுத்து, அவர் எழுந்து அதுகுறித்து பேசியிருக்கிறார். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து சொல்வதைக் கேளுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எனக்குத் தெரியும்; நீங்கள் உட்காருங்கள். சபையை நடத்துவதற்கு எனக்கெல்லாம் நீங்கள் சொல்லிக்கொடுக்காதீர்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவரைப் பேசுவதற்கு நான் அனுமதித்திருக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் எதிர்க்கட்சித் தலைவரைப் பேச அனுமதித்தேன்; அவர் பேசினார். பேசியதற்குத்தான் நான் பதில் சொன்னேன். மேற்கொண்டு அவர் பேசுவதற்கும் நான் அனுமதி அளித்திருக்கிறேன். அப்படியிருக்கும்போது நீங்கள் எழுந்து நின்று, ஆளாளுக்குப் பேசினால் எப்படி? (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, அவர் பேசும்போது, 'அதுகுறித்து detail-ஆகப் பேசவேண்டாம். அதுகுறித்து நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது' என்று நான் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) அதற்கு அவருடைய பதில் என்னவென்று கேட்கலாம்; நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நீங்கள் சொல்லுங்கள். வழக்கு விவரத்திற்குள்ளே போகாமல் உங்கள் கருத்தைப் பதிவு செய்யுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்தில் பாலாறு தோன்றி, அங்கு 93 கிலோ மீட்டர் பாய்ந்து, ஆந்திர மாநிலத்திற்குள் நுழைகிறது. ஆந்திராவிலே வெறும் 33 கிலோ மீட்டர் மட்டுமே பாய்ந்து தமிழகத்திற்குள்ளே நுழையக்கூடிய பாலாறு, நம் மாநிலத்திற்குள் 222 கிலோ மீட்டர் பயணிக்கிறது. இறுதியிலே வயலூர் என்னும் இடத்திலே வங்கக் கடலிலே சங்கமிக்கிறது என்பதைப் பார்க்கும்போது, பாலாறு தண்ணீரைப் பெரிதும் நம்பியிருப்பது நம்முடைய தமிழகம்தான்.

அதிலே குறிப்பாக, வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் உள்ளிட்ட 3 மாவட்டங்களுக்கும், அதைத் தொடர்ந்து திருவள்ளூர், சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கும் பாலாறு

மிகப்பெரிய நீராதாரமாக விளங்கிக்கொண்டிருக்கிறது. மக்களுடைய குடிநீர்த் தேவைக்கும், நான்கரை இலட்சம் ஏக்கர் விவசாய நிலத்திற்காகவும் பாலாறு ஆதாரமாக இருந்துகொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், பாதுகாப்புத் துறையினுடைய முக்கிய கேந்திரமாக விளங்கக்கூடிய கல்பாக்கம் அணு மின் நிலையம் பாலாற்றை நம்பித்தான் இருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1892 ஆம் ஆண்டு சென்னை—மைசூர் ஒப்பந்தத்திலே இருக்கக்கூடிய அட்டவணை Aஇல் குறிப்பிட்டிருக்கின்றபடி, பல மாநிலங்களுக்கிடையில் பாயும் 15 முக்கிய நதிகளில் பாலாறும் ஒன்றாக விளங்கிக்கொண்டிருக்கிறது. எனவே, மாநிலத்தினுடைய முன் அனுமதியின்றி புதிய அணையைக் கட்டவோ அல்லது நீரைத் தடுப்பதற்கான கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவோ கூடாது. இதுமட்டுமின்றி, தமிழகத்தின் அனுமதியின்றி நீரைத் திருப்புவதோ, தேக்குவதோ கூடாது. 1892 ஆம் வருட ஒப்பந்தப்படி, பாலாற்று நீரைத் தேக்கவோ அல்லது திருப்பவோ, புதிய அணை அல்லது தடுப்பணை போன்றவற்றை ஆந்திர மாநில அரசு கட்டவோ கூடாது.

இதை மீறி ஆந்திர மாநிலத்திலுள்ள—தற்போது சீமாந்திர மாநிலம்—-குப்பம் தாலுகாவில் இருக்கக்கூடிய கணேசபுரத்திலே 2006-ல் புதிய அணை கட்டக்கூடிய முயற்சியை மேற்கொண்டது. அப்போதிருந்த அ.தி.மு.க. அரசு அது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்ற நிலையிலே, 10-2-2006 அன்று ஒரு வழக்கும் போட்டிருக்கிறது; அந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திலே இருக்கிறது. எனவே, தங்களுடைய உத்தரவின்படி, அந்தப் பிரச்சினைக்குள் நான் செல்ல விரும்பவில்லை. அதைத் தொடர்ந்து மே மாதம் 2006-லே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப்பிறகு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், எதிர்க்கட்சித் தலைவரைப் பேச அனுமதித்தேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள் நீங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களை அழைத்திருக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசியதற்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவரை நான் அழைக்கிறேன். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்ததற்குப் பிறகு நீங்கள் பேசலாம். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மரபு இருக்கின்றது அல்லவா? (குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் உட்காருங்கள்; நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் உங்களைப் பேசுவதற்கு அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். இதெல்லாம் சரியில்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எனக்குத் தெரியும்; நீங்கள் உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள்; நான் சொல்கிறேன். இப்படி எல்லாம் செய்தால் எதுவும் செய்ய முடியாது; இப்படி எல்லாம் நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான் பிறகு அனுமதி கொடுக்கிறேன் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) ஒரு அரைநிமிடம்தான். நான் சொல்லிவிடுகிறேன். இரண்டே இரண்டு வார்த்தைகள்தான். நான்*

*2016 ஜுலை 25]* [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) இதெல்லாம் நல்ல நடைமுறையல்ல. இது நல்ல மரபு கிடையாது. (குறுக்கீடுகள்) இது நல்ல நடைமுறை கிடையாது. (குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான்தான் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன் அல்லவா? அதன்பிறகும் இப்படிச் செய்தால் நான் எப்படி அனுமதி கொடுக்க முடியும்? (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான்தான் அனுமதி கொடுத்தேன் அல்லவா? (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவரான நான் பேசுவதற்கு மீண்டும் அனுமதி கொடுக்கிறேன் என்றும் சொல்லியிருக்கிறேன். முதலில் அவர் பேசிக்கொண்டிருந்தார்; இடையில் அவை முன்னவர் அவர்கள் குறுக்கிடுகிறார். (குறுக்கீடுகள்) அவை முன்னவர் அவர்கள் பேசியதற்குப் பிறகு, திரும்பவும் பேச அனுமதி கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புக் கொடுக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள்; நான் அனுமதி கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் அனுமதி கொடுக்கமாட்டேன் என்று சொல்லவில்லையே; நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எழுந்து நிற்கின்ற அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் செய்வது முறையல்ல. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசவேண்டுமென்று கேட்டார்; அவர் பேச ஆரம்பித்த உடனேயே ஒரு பிரச்சினையைச் சொன்னார். அதுகுறித்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது என்று நான் சொன்னேன். (குறுக்கீடுகள்) நான் சொல்வதை நீங்கள் கேளுங்கள்; உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. இதெல்லாம் முறையல்ல. உட்காருங்கள். நான் பேசுகிறேன். பேரவைத் தலைவரான நான் எழுந்து நின்று பேசுகிறேன். நீங்கள் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பேச அனுமதித்து அவர் பேசிக்கொண்டிருக்கிறார்; இடையிலே அவை முன்னவர் அவர்கள் பதில் சொல்வதற்கு எழுந்தார். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். அவர் பேசி முடித்தபிறகு எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் திரும்பவும் அனுமதி கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் திரும்பவும்*

[பேரவைத் தலைவர்] [2016 ஜூலை 25

வாய்ப்புத் தருகிறேன். நான் சொல்வதைக் கேளுங்கள். இப்படி ஒரு சார்பாக மட்டும் நான் அவையை நடத்த முடியாது. நீங்கள் எழுப்பி இருக்கிற பிரச்சினைக்கு மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பதில் சொல்ல எழுந்தார். அவர் பேசி முடித்த பிறகு நான் உங்களுக்குப் பேச அனுமதி கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் நீண்ட விவாதமின்றி முடிப்பதாக இருந்தால், நான் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஒரேயொரு வார்த்தை மட்டும் பேசட்டும். (குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து நின்றுகொண்டு கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இது தவறு. (குறுக்கீடுகள்)

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னதான் சத்தம் போட்டாலும் சரி, (குறுக்கீடுகள்) நீங்கள் என்னதான் கூச்சல் போட்டாலும் சரி, (குறுக்கீடுகள்) நீங்கள் என்னதான் கூச்சல் போட்டாலும் சரி, எழுந்து நின்று குறுக்கிட்டு எதைப் பேசினாலும் சரி, (குறுக்கீடுகள்) சபையை நடத்துவது என்னுடைய பொறுப்பு. (குறுக்கீடுகள்) சபையை நடத்துவதற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளின்படி, எதிர்க்கட்சித் தலைவர் பேசிக்கொண்டிருக்கும்போது, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் குறுக்கிட்டால், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கு வாய்ப்புத் தர வேண்டியது என்னுடைய கடமை. (குறுக்கீடுகள்) அதனடிப்படையிலே இப்போது அவை முன்னவர் அவர்கள் பேசுவார். அவர் பேசி முடித்ததற்குப் பின்னர், எதிர்க்கட்சித் தலைவரை நான் மீண்டும் அழைக்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டு கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் தெளிவாகச் சொல்கிறேன்; எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இரண்டு

*2016 ஜூலை 25]* [பேரவைத் தலைவர்]

*பேருக்கும் சேர்த்துச் சொல்கிறேன்; திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவருக்கும் சேர்த்துச் சொல்கிறேன். எப்படி அவையை நடத்த வேண்டுமென்று நீங்கள் எனக்கு வழிகாட்டக் கூடாது; எனக்குத் தெரியும். நான் அனுமதி கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், குறுக்கிட்டு வாய்ப்புக் கேட்டிருக்கிறார். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசி முடித்ததற்குப் பின்னர், மீண்டும் எதிர்க்கட்சித் தலைவரை நான் பேச அழைக்கிறேன். அப்போது உங்களுடைய பேச்சைத் தொடரலாம். (குறுக்கீடுகள்) ஆனால், என்னை நீங்கள் வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்; ஒரு நிமிடம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்னை நீங்கள் வற்புறுத்த முடியாது. நீங்கள் எவ்வளவுதான் சத்தம் போட்டாலும், (குறுக்கீடுகள்) எப்படி சபையை நடத்த வேண்டுமென்று நீங்கள் எனக்குப் பாடம் சொல்லித்தர முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) தயவு செய்து அமருங்கள். (குறுக்கீடுகள்) தயவு செய்து அமருங்கள். (குறுக்கீடுகள்)*

*மாண்புமிகு அவை முன்னவர் பேசியபிறகு, எதிர்க்கட்சித் தலைவர் தன்னுடைய பேச்சைத் தொடர்வதற்கு நான் அனுமதியளிக்கிறேன். சபையினுடைய தலைவர் நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நான்தான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்கிறேனே; இப்படி நீங்கள் என்னை வற்புறுத்தினால், நான் எப்படி சபையை நடத்துவது? (குறுக்கீடுகள்) இப்படி நீங்கள் வற்புறுத்தினால் நான் எப்படி சபையை நடத்துவது? (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், இப்படி உங்களுடைய கட்சி உறுப்பினர்கள் ஒத்துழைக்காமல் இருந்தால் சபையை எப்படி நடத்துவது? (குறுக்கீடுகள்) சபையை நடத்த எனக்கு அனுமதி கொடுங்கள். (குறுக்கீடுகள்) சபையை நடத்த விடுங்கள். (குறுக்கீடுகள்) நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்கிறமாதிரி, நான் கேட்க முடியாது; சபையில் நான் சொல்கிறபடிதான் நீங்கள் கேட்கவேண்டும். உட்காருங்கள், நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் எவ்வளவு நேரம் வற்புறுத்தினாலும் சரி, நான் சபையை நடத்துவதற்கு நீங்கள் எனக்கு வழிகாட்ட முடியாது; எனக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதற்கு வாய்ப்புத்*

தருகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசி முடித்தவுடனேயே, நான் எதிர்க்கட்சித் தலைவரைத் தொடர்ந்து பேச அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) மீண்டும், மீண்டும் சொல்கிறேன், நீங்கள் எவ்வளவு நேரம் வற்புறுத்தினாலும், என்னுடைய முடிவிலே மாற்றம் இல்லை; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர், நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) இப்படிச் செய்வது முறையல்ல. நான் அடுத்த agenda-க்குப் போக வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) நான் எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதற்கு அனுமதி அளிக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், உங்களுக்கும் நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள்; உங்களுக்கும் வாய்ப்புத் தருகிறேன்; எதிர்க்கட்சித் தலைவருக்கும் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்னை நீங்கள் வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்; உங்கள் இடத்திற்குச் சென்று உட்காருங்கள். வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழகத்திற்கான வாய்ப்பை நான் மறுக்கவில்லை; வாய்ப்பைத் தருகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) திரு. எ.வ. வேலு நீங்கள் எல்லோரும் இன்றைக்குப் பேச வேண்டும்; உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அவரைப் பேச அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்கிறபடி நான் சபையை நடத்த முடியாது. சபையை விதிமுறைகளுக்குட்பட்டுத்தான் நடத்த முடியும். (குறுக்கீடுகள்)

*2016 ஜூலை 25]* [பேரவைத் தலைவர்]

*சபையை நீங்கள் சொல்வது மாதிரியெல்லாம் நடத்த முடியாது. (குறுக்கீடுகள்) அப்படியெல்லாம் நடத்த முடியாது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசியதற்குப் பின்னாலேதான், எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் வாய்ப்பு அளிப்பேன். நீங்கள் எவ்வளவு நேரம் கூச்சல் போட்டாலும் நான் அனுமதி அளிக்க முடியாது. (குறுக்கீடுகள்) வேறு வழியில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவை முன்னவர் பேசட்டும்; பேசியதற்குப் பின்னாலே நான் எதிர்க்கட்சித் தலைவருக்கு வாய்ப்பு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் நின்று கொண்டு தொடர்ந்து கூச்சலிட்டனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *பேசுவதே கேட்கவில்லை; எப்படிப் பேசுவது? (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்* zero hour-ல் *கேள்வி எழுப்பியதற்கு. . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான்தான் வாய்ப்புத் தருகிறேனே, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்; வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் அமைதியாக அமருங்கள். எதிர்க்கட்சித் தலைவருக்கு வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசி முடித்தவுடனேயே நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உங்கள் தலைவர்கள் இரண்டுபேருமே சரியென்று ஒப்புக்கொண்டார்கள். மற்றவர்கள் ஏன் ஒப்புக்கொள்ளமாட்டேன் என்கிறீர்கள்? அதற்கு என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) நீங்கள் யாருடைய கட்டுப்பாட்டில் இயங்குகிறீர்கள் என்றே தெரியவில்லையே? (மேசையைத் தட்டும்*

ஒலி) (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், நீங்கள் சொன்னபின்பும் உங்கள் உறுப்பினர்கள் கேட்கமாட்டேன் என்கிறார்களே?

ஒன்று, எனக்குக் கட்டுப்பட வேண்டும்; சொல்வதைக் கேளுங்கள், (குறுக்கீடுகள்) இல்லையென்றால், உங்களுக்குக் கட்டுப்பட வேண்டும். யாருக்கும் கட்டுப்பட மாட்டேன் என்கிறார்களே? (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன்; உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். உங்கள் தலைவர் சொல்வதையே கேட்கமாட்டேன் என்கிறீர்களே; சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) திரு. டி.ஆர்.பி. ராஜா, நான் சொல்வதைத்தான் கேட்கமாட்டேன் என்கிறீர்கள்; உங்கள் தலைவர் சொல்வதையாவது கேளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் இருக்கைக்குப் போய் உட்காருங்கள்; வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு பிரச்சினையைப்பற்றி இங்கே பேச ஆரம்பித்தபோது, ‘அதுகுறித்த வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது’ என்று நீங்கள் சொன்னீர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், தான் அந்த வழக்கிற்குள் போகவில்லை என்று சொன்னதால் நீங்கள் அவரைப் பேச அனுமதித்தீர்கள். ஒரு பிரச்சினை zero hour-ல் எழுப்பப்படும்பொழுது, அது என்ன பிரச்சினை? அந்தப் பிரச்சினைக் குறித்து அரசால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது குறித்து மட்டும்தான் கேட்க வேண்டும். (குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் பேசிக்கொண்டிருப்பீர்களா? இது தவறு; இதெல்லாம் allow பண்ண முடியாது. (குறுக்கீடுகள்)

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், இது என்ன முறை? உட்காருங்கள்; அவர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** Zero hour-ல் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருக்க முடியாது. Zero hour-ல் ஒரு மணி நேரம் பேசுவார்களா? அதெல்லாம் பேச முடியாது. என்ன பிரச்சினை என்று சொல்லிவிட்டு, அதிலே அரசால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும்தான் கேட்க

*2016 ஜூலை 25]* [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*வேண்டும். அதை விட்டுவிட்டு நீங்கள் உங்கள் இஷ்டத்திற்குப் பேசிக் கொண்டிருந்தால், அது நல்ல நடைமுறை கிடையாது. (குறுக்கீடுகள்) அதுபோக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் மிகவும் பொறுமை காட்டிக் கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 25 நிமிடங்கள் ஆகின்றன. பொறுமை; பொறுமை; இன்றைக்கு ஏகப்பட்ட பொறுமையை உங்களிடம் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) பொறுங்கள்; பொறுங்கள். பேச்சுக்கு பேச்சு நீங்கள் எல்லோரும் சேர்ந்து சத்தம் போட்டால் எப்படி? நாங்களும் அதேபோன்று சத்தம் போட்டால் என்ன ஆகும் நிலைமை? (குறுக்கீடுகள்) எல்லோரும் கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) இது தவறு. எந்த உறுப்பினரும். . . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்கிறேன் அல்லவா? (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னதற்குப் பிறகு ஏன் இப்படி எழுந்து நின்று கொண்டிருக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *நாங்களும் சத்தம் போட்டால் என்ன நிலைமை ஏற்படும் என்றுதான் உங்களிடம் நான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களை யோசிக்க வைக்கிறேன். அதை நீங்கள் எண்ணிப் பாருங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. துரைமுருகன், உங்கள் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *25 நிமிடங்களாக நீங்கள் எழுந்து நின்று சத்தம் போடுகிறீர்கள். மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லிக்கொண்டே இருக்கிறார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசிமுடித்த பிறகுதான் நான் பேச வேண்டும் என்று சொல்வது எந்த விதியிலும் இல்லை; அதுபோன்று எந்த மரபும் இல்லை. நீங்கள் நன்றாகப் புரிந்துகொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) 25 நிமிடங்களாக யாரையும் பேசவிடாமல் நீங்கள் உங்கள் இஷ்டத்திற்குக் கூச்சல் போட்டபடியே இருந்தால் யார் பொறுப்பார்கள்? நன்றாக*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜூலை 25

யோசனை செய்து சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இதெல்லாம் நல்ல நடைமுறையா? நீங்கள் சபையை ஒழுங்காக நடத்தவிடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசி முடித்தவுடன், எதிர்க்கட்சித் தலைவருக்குப் பேசுவதற்கு அனுமதி தருகிறேன் என்று தாங்கள் சுமார் 15 தடவை சொல்லிவிட்டீர்கள். அதற்குப்பிறகும் இவர்கள் இப்படி கூச்சல்-குழப்பத்தை விளைவித்துக் கொண்டிருந்தால் இது நல்ல நடைமுறையா என்று மட்டும் அவர்கள் யோசனை செய்து பார்க்க வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் பேசி முடியுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன கருத்துகள் ஒருபுறம் இருக்க, அதே பிரச்சினையையொட்டி இன்னொரு பிரச்சினையை நான் குறிப்பிடவிரும்புகிறேன். கனகநாச்சியம்மன் கோயிலிலும் சீமாந்திர அரசினுடைய ** பாலாற்றின் கரையில் இருக்கக்கூடிய கனகநாச்சியம்மன் கோயில் தமிழக பக்தர்களால் கட்டப்பட்டு, தமிழக இந்து சமஸ்தானத்தின். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு பிரச்சினையைப் பேசுவதற்குத்தான் என்னிடம் அனுமதி கேட்டீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ஒரு பிரச்சினையைப் பேசுவதற்கு அனுமதி கேட்டீர்கள்; அனுமதி வழங்கினேன். தொடர்ந்து வேறு பிரச்சினையைப்பற்றி பேசுவது சரியல்ல. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நிறைவாக இந்த அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, உடனடியாக தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி அல்லது அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, இதுகுறித்து சுமுகமான ஒரு தீர்வு காண்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*2016 ஜூலை 25]* [திரு. மு.க. ஸ்டாலின்]

இன்னொன்று, அங்கே தடுப்பணை கட்டக்கூடிய அந்த நிலையைக் கண்டிக்கக்கூடிய வகையிலே, இந்த சட்டமன்றத்தில் ஏகமனதாக ஒரு கண்டனத் தீர்மானத்தையும் நிறைவேற்றிட வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் கேட்டு அமைகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, நீங்கள் காலையில் 9-25 மணிக்குத்தான் இதுகுறித்த கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறீர்கள். உங்களுடைய பிரச்சினையும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் raise செய்தப் பிரச்சினையும் ஒன்றுதான். எனவே, அதைப் பதிவு செய்கிறேன். (குறுக்கீடு) நேரத்தின் அருமை கருதி, நீங்களும் அவையில் அந்தப் பிரச்சினையை raise செய்ததாக நான் பதிவு செய்துகொள்கிறேன். தயவு செய்து அமருங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே தடுப்பணையினுடைய உயரத்தை அதிகப்படுத்துவதாகச் சொல்கிறார்கள். அதேபோல, கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களோடு தொடர்ந்து நாம் சுமுகமாக உறவு வைத்துக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சருடன் பேச வேண்டும்; அவர்களால் முடியவில்லையென்றால், அந்தப் பொறுப்பிலே இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்களாவது தயவு செய்து பேசி, ஒரு சுமுகமான முடிவுக்கு வரவேண்டும். இது நீடித்தால் பக்கத்திலே இருக்கக்கூடிய மாநிலங்களுக்கும், நமக்கும் பிரச்சினை அதிகமாகிக் கொண்டேதான் போகும். வழக்கு தொடர்ந்து கொண்டே இருக்கலாம். நம்முடைய தலைமுறை முடிகிற வரையிலும்கூட இந்த வழக்கு நீடிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசும்போது, ஆந்திர அரசு **என்ற வார்த்தையைக் குறிப்பிட்டார்கள். அந்த வார்த்தை நமது அண்டை மாநிலத்தினுடைய உறவைப் பாதிப்பதுபோல் இருக்கிறது என்பதால்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகா மாநிலம், கோலார் மாவட்டத்தில் பாலாறு உற்பத்தியாகி 92 கி.மீ. தூரம் கர்நாடக மாநிலத்தில் பயணித்து ஆந்திரா மாநிலத்தின் சித்தூர் மாவட்டம் வழியாக 33 கி.மீ. தூரம் கடந்து தமிழ்நாட்டிலுள்ள வேலூர் மாவட்டத்திற்குள் நுழைந்து, திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்கள் வழியாக தமிழகத்தில் 222 கி.மீ. தூரம் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கின்றது. 1892 ஆம் ஆண்டு மதராஸ்-மைசூர் ஒப்பந்தத்தின்படி, கீழ்ப் பகுதியிலுள்ள மாநிலத்தின் முன்னனுமதி பெறாமல் நீரைத் தடுப்பதோ, திருப்புவதோ மற்றும் நீரைத் தேக்குவதற்கான கட்டுமானப் பணிகளையோ அல்லது இதுபோன்ற எந்த ஒரு செயலையும் மேற்கொள்ள முடியாது.

சித்தூர் மாவட்டத்தில் குப்பம் தாலுகா, கணேசபுரத்தில் பாலாற்றின் குறுக்கே ஓர் அணையை ஆந்திர அரசு கட்ட இருந்ததை எதிர்த்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்பேரில் தமிழ்நாடு அரசு 10-2-2006 அன்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு O.S.No. 2/2006-ஐ தாக்கல் செய்ததன்பேரில், கட்டுமானப் பணிகள் தடுக்கப்பட்டன. இந்த வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப்பிறகு உங்களுடைய அரசு ஆட்சிக்கு வந்தது.

தற்போது பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு பெரும்பள்ளம் கிராமத்தில் அமைந்துள்ள தடுப்பணையின் உயரத்தை தன்னிச்சையாக 9 அடியிலிருந்து 12 அடி வரை உயர்த்தியுள்ளதாக செய்தி வந்தவுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் 1-7-2016 அன்று ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், 1892 ஆம் ஆண்டு மதராஸ்-மைசூர் ஒப்பந்தத்தை மீறும்வகையில் ஆந்திர அரசு பெரும்பள்ளம் கிராமத்தில் உள்ள தடுப்பணையின் உயரத்தை தன்னிச்சையாக உயர்த்தியதற்கு தமிழ்நாட்டின் வலிமையான எதிர்ப்பைத் தெரிவித்திருந்தார்கள். ஆந்திர மாநில முதலமைச்சர் உடனடியாக இப்பிரச்சினையில் தலையிட்டு, தற்போது உயர்த்தப்பட்ட தடுப்பணையின் உயரத்தை மீண்டும் பழைய நிலைக்குக்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*2016 ஜூலை 25*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

கொண்டுவரவும், கூடுதலாக நீரைத் தேக்காமல் இருக்கவும் மற்றும் இயற்கையாக தமிழ்நாட்டிற்குள் ஓடுகின்ற நீரை உறுதிப்படுத்தவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனடியாக அறிவுரைகள் வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் 1-7-2016 நாளிட்ட கடிதத்தின் தொடர்ச்சியாக, தடுப்பணையின் உயரம் உயர்த்தப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி, தமிழ்நாட்டின் வலிமையான மறுப்பினைத் தெரிவித்து 11-7-2016 அன்று தமிழக அரசின் தலைமைச் செயலாளர் மூலமாக ஆந்திரப் பிரதேச அரசின் தலைமைச் செயலாளர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், தடுப்பணைகளை முன்பிருந்த நிலைக்கே கொண்டு வரவேண்டும் என்றும், 1892 ஆம் ஆண்டு போடப்பட்ட மதராஸ்-மைசூர் ஒப்பந்தத்தை மீறும்வகையில் செயல்படக் கூடாது என்றும் வலியுறுத்தப்பட்டது. மேலும், அன்றே தலைமைச் செயலாளர் கடிதம்மூலம், இப்பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு, ஆந்திர அரசுக்கு உரிய அறிவுரை வழங்குமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், இக்கடிதத்தில் மத்திய அரசு உடனடியாகத் தீர்வுகாணாவிட்டால் சட்டப்படி தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தை அணுகும் என்றும் தெரிவிக்கப்பட்டு, *(மேசையைத் தட்டும் ஒலி)* அதன் அடிப்படையில் 18-7-2016 அன்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரசின் மனுவில் பாலாற்றின் குறுக்கே நீரைத் தேக்கும்வகையிலோ, நீரைத் திருப்பிவிடும்வகையிலோ எந்தவித கட்டுமானப் பணிகளையோ மேற்கொள்ளக் கூடாது என்றும், தற்சமயம் உயர்த்திக் கட்டிய தடுப்பணையை பழைய நிலைக்கே கொண்டுவர உரிய ஆணைகள் பிறப்பிக்கவும் வேண்டப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனுவின் நிலை முடியும்வரை பாலாற்றின் கிளை ஆறுகளில் எவ்வித தடுப்பும் ஏற்படுத்தக்கூடாது என்றும், பாலாற்றில் உயர்த்தப்பட்ட தடுப்பணையில், அவை உயர்த்தப்படுவதற்கு முன்பு இயற்கையாகச் சென்றுகொண்டிருந்த நீரை உறுதிப்படுத்த வேண்டும் என்றும், புதிய தடுப்பணைகள் கட்டக் கூடாது என்றும் உறுதிக் கட்டளை வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

*[2016 ஜூலை 25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்குப் பிறகு விவாதம் கிடையாது. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். அதுசம்பந்தமாக எதுவும் பேச முடியாது. (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் வேறு விஷயம் ஏதாவது பேசுவதாக இருந்தால் நான் அனுமதி அளிக்கிறேன். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்* raise *செய்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லிவிட்டார்கள். அதே பொருள் குறித்து நீங்கள் பேசுவதாக இருந்தால், பேச வேண்டாம்; உட்காருங்கள். (குறுக்கீடு) வேறு ஏதாவது பொருள் குறித்துப் பேசுவதாக இருந்தால் நான் அனுமதியளிக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையில் மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் இந்தப் பொருள் குறித்து தனது கருத்துகளை பதிவு செய்திருக்கிறார்கள். 2006 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதத்தில் தெரிவித்த கருத்து. இதைத்தான் நான் முன்கூட்டியே* point of order—*ல் கிளப்பியுள்ளேன். "ஒரு வழக்கு நீதிமன்றத்தில் இருக்கின்றபோது, (குறுக்கீடு) அதை அவர்களே தொடுத்திருந்தாலும் சரி, யார் தொடுத்திருந்தாலும் சரி, அந்த வழக்கு குறித்து சட்டமன்றத்தில் பேசுவது மரபல்ல. அதற்கு சட்டமும் இடம் தரவில்லை.* Sub-judice *என்பார்கள்; அதனாலேயே அத்தகைய செய்திகளை இந்த மாமன்றத்தில் விவாதிக்க அனுமதிக்கக் கூடாது என்பது சட்டமன்ற மரபு, சட்டமன்ற விதி". இதைத்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், 2006, டிசம்பர் 6 ஆம் தேதி அவையில் பேசியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் தாங்களும் சுட்டிக்காட்டியுள்ளீர்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

*2016 ஜூலை 25]*

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வழக்கு நீதிமன்றத்தில் இருக்கின்றபோது, அந்த வழக்குக்குள்ளே போய் பேசக்கூடாது என்று தாங்களும் சொன்னீர்கள்; நானும் அதைத்தான் சொல்லியிருக்கிறேன். அதிலே மாறுபட்ட கருத்து எதுவும் இல்லை. ஆனால், என்னுடைய யோசனை என்னவென்றால், ஓர் அரசு, நீங்களாக இருந்தாலும் சரி, நாங்களாக இருந்தாலும் சரி, கடிதம் எழுதியோ, உச்ச நீதிமன்றத்திற்கு சென்றோ தடுப்பணை கட்டுவதைத் தடுக்கும்படி கேட்போம். ஆனால், இவற்றையும் மீறி சில செயல்கள் நடக்கின்றன. மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் நம்மிடத்திலே நல்ல நட்பாக இருக்கக்கூடியவர். இன்னும் சொல்லப்போனால் அவருடைய தொகுதி, நம்முடைய தமிழ்நாட்டை ஒட்டியிருக்கிறது. எனவே, இதை சுமுகமாக தீர்க்க வேண்டும். இது அவருடைய கவனத்தை மீறிகூட வந்திருக்கலாம். எனவே, நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலேயே, சர்வ கட்சித் தலைவர்களை அழைத்துக் கொண்டு போய் அவரை சந்தித்து, விளக்கம் சொன்னால், அவராகவே ஒத்துக்கொள்வார். காரணம், அவருக்கு தமிழர் ஓட்டுக்கள் நிறைய இருக்கின்றன. குப்பம் தொகுதி என்பது தமிழ்நாட்டோடு ஒட்டி உறவாடி, mingle ஆகியிருக்கிற ஒரு தொகுதி. எனவே, ஒரு delegation-ஐ மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில், திரு. சந்திரபாபு நாயுடு அவர்களைப் பார்க்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுப்பினால், நிச்சயம் இதற்குப் பயன் ஏற்படும். இந்தப் பிரச்சினையில் பாதிக்கப்படும் மாவட்டத்தைச் சார்ந்தவன் என்கின்ற காரணத்தினால், உரிமையோடு சொல்கிறேன். அவ்வப்போது இப்படி நீங்கள் கொஞ்சம், கொஞ்சம் மைக்கை கொடுத்தால் எந்தப் பிரச்சினையும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். 2006 ஆம் ஆண்டே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (குறுக்கீடு) அதைத்தான் திருப்பிச் சொல்கின்றேன். அவர்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2016 ஜூலை 25

சொன்னதற்குப் பதில் சொல்கின்றேன். 2006 ஆம் ஆண்டே வழக்கு தொடரப்பட்டது. அதற்குப் பின்பு உங்களுடைய ஆட்சி வந்தது. 2011 ஆம் ஆண்டுவரைக்கும் உங்களுடைய ஆட்சி இருந்தது. நீங்கள் அப்போது இந்தப் பிரச்சினையிலே முனைப்போடு செயல்பட்டிருந்தால், இந்த நிலை ஏற்பட்டிருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) தடுப்பணை கட்ட வேண்டிய விவகாரம் வந்திருக்காது. ஆகவே, 2006 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரைக்கும் உங்களுடைய ஆட்சி இருந்த காலத்திலே என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? எத்தனை முறை ஆந்திர முதலமைச்சரைச் சந்தித்துப் பேசினீர்கள்? அப்படி சந்தித்துப் பேசி, ஒரு தீர்வு காணப்பட்டிருந்தால், இந்தப் பிரச்சினை இப்போது எழுவதற்கு வாய்ப்பு இருந்திருக்காது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது Zero Hour. (குறுக்கீடு) விவாதம் மேற்கொண்டும் வேண்டாம். (குறுக்கீடு) Zero Hour-ல்தான் உங்களை நான் பேச அனுமதித்து, நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள் மானியக் கோரிக்கையில் பேசும்போது பேசலாம், உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் மானியக் கோரிக்கையில் பேசும்போது பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஆட்சியிலே ஏன் செய்யவில்லை என்று கேட்கிறார். அப்போது இவ்வளவு உயரத்திற்கு அவர்கள் அணை கட்டவில்லை. நாங்கள் சொன்னவுடனேயே அணை கட்டுவதை நிறுத்திவிட்டார்கள். இப்போது பெரிய அணை கட்டியுள்ளார்கள். அவ்வளவுதான் வித்தியாசம். நாங்கள் சொன்னவுடன் அப்போது அணை கட்டுவதை நிறுத்திவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் மானியக் கோரிக்கையில் பேசிக் கொள்ளலாம், உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

*2016 ஜூலை 25]*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். இதற்கு ஒரு சுமுகமான ஏற்பாடு, நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்பதன் அடிப்படையிலே அவர் கருத்து தெரிவித்தார். அதற்குத்தான் நான் சொல்கின்றேன். 2006 ஆம் ஆண்டே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழக்கு தொடர்ந்து, அந்த வழக்கு நிலுவையில் இருந்தது. அப்பொழுதே நீங்கள் இதற்கு முயற்சி எடுத்திருந்தால், இந்தப் பிரச்சினை தொடர்ச்சியாக நீண்டுகொண்டு போயிருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு முற்றுப்புள்ளி கிடைத்திருக்கும். ஆகவே, தடுப்பணை கட்டுகின்ற இந்தப் பிரச்சினைக் குறித்து நீங்கள் ஆந்திரப் பிரதேச முதலமைச்சருடன் அன்றைக்கு கலந்து பேசி, உங்களுடைய ஆட்சியில் உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த நிலை இப்போது ஏற்பட்டிருக்காது என்பதைத்தான் தங்கள் வாயிலாகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

## 3. திருத்திய வரவு—செலவுத் திட்டம், 2016—2017, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2016-2017 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள். (குறுக்கீடுகள்) மீதியெல்லாம் நாளை பேசலாம். 40 நிமிடங்கள் ஆகிவிட்டன. Zero Hour-ல் 40 நிமிடங்கள் பேச அனுமதித்துவிட்டேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. எ.வ. வேலு, நீங்கள் பேசுங்கள்.*

*முற்பகல் 10-40*

****திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் ஐந்தாவது முறையும் சட்டப் பேரவை உறுப்பினராகப் பணியாற்றுவதற்காக எனக்கு ஒரு வாய்ப்பைத் தந்த, தமிழகத்தை ஐந்து முறை மக்களுக்காக ஆண்ட கழகத்தினுடைய தலைவர், என் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிற அன்புத் தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்த நிதிநிலை அறிக்கையிலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பைத் தந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய*